வசதியை ஏற்படுத்தித் தர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. சுரேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கத் தாரகை அம்மா அவர்களை வணங்குகிறேன். நான் முன்பே கூறியதைப்போல, எனது தொகுதி மக்கள் நான் அம்மாவை சந்தித்தவுடன் "ஆளும் வளரணும், அறிவும் வளரணும் அதுதாண்டா வளர்ச்சி, நீ அம்மாவை சந்திக்க நினைத்ததே நீ எடுத்த சிறப்பான முயற்சி" என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், நாராயணன்குப்பம் கிராமத்தில் தடுப்பணையும், குப்பநத்தம் வரையிலே தடுப்பணையும், சாத்தனூர் அணைக்கு பராமரிப்புத் தொகையும், அரசுப் பேருந்து நிற்பதற்கு டெப்போவும், செங்கத்திற்கு ஆர்.டி.ஓ. அலுவலகமும் போன்ற எண்ணற்ற உதவிகளை அளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 4-10-2013 அன்று பட்டாசு வெடித்து, அந்தக் கோர விபத்தில் மூன்று பேர் உயிர்நீத்திருக்கின்றார்கள். ஒருவர் கால் இழந்திருக்கின்றார். அவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உதவிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். ஆதி திராவிட மக்களின் காவல் தெய்வமாய் விளங்குகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் குடும்பங்களுக்கு உதவி செய்திட வேண்டுமாய் மனப்பூர்வமாக வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

43—

தடுப்புச் சுவர்

***15279—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் தொகுதி, கீழக்கரையில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள படகுகள் நிறுத்தும் தளத்தின் இருபுறமும் தடுப்புச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2013 அக்டோபர் 28]

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராமநாதபுரம் தொகுதி, கீழக்கரையில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள படகுகள் நிறுத்தும் தளத்தை தற்போது 18 மீன்பிடிப் படகுகள் பயன்படுத்தி வருகின்றன. இப்படகு நிறுத்தும் தளத்தில் 5,400 கிலோ அளவிற்கு மீன்கள் கொண்டுவரப்படுகின்றன. இத்தளத்தில் தற்போது மீன் துறை சார் ஆய்வாளர் அலுவலகம், TAFCOFED மூலம் டீசல் பங்க், மீன் இறங்குதளம், Light House மற்றும் மீன் ஏலக்கூடம் போன்ற வசதிகள் உள்ளன. கீழக்கரையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மீன் இறங்குதளத்தில், Fish Landing Center-ல் இருபுறமும் தடுப்புச் சுவர்கள் அமைத்தால் படகுகளிலிருந்து மீன்களை இறங்குதளத்தில் கொண்டுவர இயலாது. மேலும், மீன் இறங்குதளத்தில் தடுப்புச் சுவர்கள் இல்லாமல் கட்டுவதற்கு முக்கியமான காரணம், மீனவர்கள் எளிதாக தரையிலிருந்து ஐஸ், மீன்பிடி வலைகள் மற்றும் பிற பொருட்களைப் படகுகளுக்கு எடுத்துச் செல்லமுடியும். படகிலிருந்து மீன்களையும், மீன்பிடி வலைகளையும் தளத்திற்குக் கொண்டு வரமுடியும் என்பதால்தான். படகின் மேல் மட்டமும், இறங்குதளத்தின் தரை மட்டமும் சமமாக இருக்கும் அளவில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இராமநாதபுரம் தொகுதி, கீழக்கரையில் கட்டப்பட்டுள்ள படகு நிறுத்தும் தளத்தில் படகுகளைக் கட்டுவதற்கு தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆகையால், படகுகள் நிறுத்தும் தளத்தின் இருபுறமும் தடுப்புச் சுவர்கள் கட்ட சாத்தியமே இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள கீழக்கரையில் ஏற்கெனவே ஒரு பழைய படகு தளம் இருக்கின்றது. அதற்குப் பதிலாகத்தான் 5 கோடி ரூபாய் செலவில் இந்தப் படகு தளம் அமைக்கப்பட்டது. ஆனால், அது மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, இன்னும் பயன்பாட்டிற்கு வரவில்லை. மாலை நேரங்களிலே கீழக்கரை மக்களுக்குப் பொழுதுபோக்கு இடமாக அது அமைந்துள்ளது. குழந்தைகள், பெண்களெல்லாம் அங்கே செல்லக்கூடிய நேரத்திலே, பலமாகக் காற்று அடித்தால் மக்கள் கடலிலே விழக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அதனால்தான், இந்தக் கேள்வியை நான் எழுப்ப வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது. எனவே, அதை படகு தளமாகப் பயன்படுத்தினால் நல்லது. இல்லாவிட்டால் அங்கே மக்கள் செல்வதைத் தடுக்க வேண்டும் அல்லது சுற்றுலாத்தலமாக அதை மாற்ற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, கீழக்கரையை நாங்கள் ஆய்வு செய்தோம். அப்போது அங்கேயிருக்கிற மீனவர்கள் எல்லோரும் இது ஓர் அருமையான திட்டம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னால்தான் எங்களுக்கு மீன்பிடி இறங்குதளம் எல்லாம் கிடைத்திருக்கிறது என்று மிகவும் பெருமைப்பட கூறினார்கள். அங்கே மீனவர்களுக்கென்று 18 படகுகள் இருக்கின்றன. F.R.P. Boat இருக்கிறது, டீசல் பங்க் இருக்கிறது. மீன் ஏலக்கூடம் இருக்கிறது. மீன்பிடிப் படகுகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதுதான் மீன் இறங்குதளம். சுற்றுலாத்தலம் அமைக்க வேண்டுமென்றால், அதற்கு வேறு இடம் பார்க்க வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற எண்ணத்திலே, அனைத்துத் தரப்பினரையும் திருப்திப்படுத்தக்கூடிய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையான சுற்றுலாத்தலம் அமைக்க வேண்டும் என்பதற்கு அங்கே வேறு நல்ல சிறப்பான இடம் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதைத் தேர்வு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கருத்துரு அனுப்பினால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செய்வதற்குத் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 அக்டோபர் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. என்னுடைய தொகுதியிலே உள்ள மண்டபத்தில் 800 விசைப் படகுகள் இருக்கின்றன. மண்டபம் வடக்குக் கடலில் கடலோரக் காவல் படையினுடைய ஜெட்டி அருகிலிருந்து சுமார் 200 மீட்டர் தூரத்திற்கு ஆற்றுவாய் சேனல் ஒன்று இருக்கின்றது. அந்தச் சேனல் ஆழமாக இல்லாததன் காரணமாக, ஒரே ஒரு படகு மட்டும் போகக்கூடிய நிலைமை இருப்பதால், சில நேரங்களிலே படகுகள் மோதிக் கொள்ளக்கூடிய ஒரு நிலையும் இருக்கின்றது. 34 ஆண்டு காலமாக இந்த ஆற்றுவாயை ஆழப்படுத்த வேண்டுமென்று மண்டபம் பகுதி மீனவர்கள் தொடர்ச்சியாக கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது மீன் இறங்குதளத்தில் இரு பக்க சுவர்கள் அமைப்பதுபற்றி. இப்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மண்டபம் பகுதியை ஆழப்படுத்துகிற விஷயத்தைப் பற்றிச் சொல்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அதை ஆய்வு செய்யும்.* Low water-*ல் வரும்போது கொஞ்சம் சிரமமாக இருக்கும்,* high water-*ல் வரும்போது அங்கே பிரச்சினை அவ்வளவாக இருக்காது. அங்கே பவளப் பாறை இருப்பதாக மத்திய ஆராய்ச்சி சுற்றுச்சூழல் துறை சொல்கின்ற காரணத்தினாலே, அதை ஆய்வு செய்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*